தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

07.02.2013 A.M

## மேட்டூர் அணையிலிருந்து 2 நாள்களில் 1.10 டிஎம்சி தண்ணீர் வெளியேற்றம்

காவிரி டெல்டா பாசனத்திற்காக, மேட்டூர் அணையிலிருந்து திங்கள்கிழமை இரவு முதல் புதன்கிழமை காலை வரை 1.10 டிஎம்சி தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

உச்ச நீதிமன்றம் காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு உடனடியாக மேட்டூர் அணையிலிருந்து 2 டிஎம்சி தண்ணீரைத் திறந்துவிட திங்கள்கிழமை உத்தரவிட்டது. இதையடுத்து, திங்கள்கிழமை இரவு 8 மணி முதல் மேட்டூர் அணையிலிருந்து வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இதையடுத்து, திங்கள்கிழமை காலை 9.56 டிஎம்சியாக இருந்த அணையின் நீர் இருப்பு புதன்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 8.46 டிஎம்சியாக குறைந்தது. நீதிமன்ற உத்தரவுப்படி, இதுவரை 1.10 டிஎம்சி தண்ணீர் பாசனத்துக்காக வெளியேற்றப்பட்டது. வியாழக்கிழமை இரவுக்குள் 2 டிஎம்சி தண்ணீர் வெளியேற்றப்படும் என பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால், அணையின் நீர்மட்டம் மளமளவெனக் குறைந்து வருகிறது. திங்கள்கிழமை காலை 34.80 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் புதன்கிழமை காலை 32.28 அடியாகக் குறைந்தது.

## சம்பா சாகுபடிக்கு 2.44 டிஎம்சி தண்ணீர் போதும்!



தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள சம்பா சாகுபடிக்கு 2.44 டிஎம்சி தண்ணீர் போதுமானது என்று தமிழகத்தில் கடந்த இரண்டு நாள்களாக நேரில் ஆய்வு செய்த மத்திய நிபுணர் குழு உச்ச நீதிமன்றத்தில் புதன்கிழமை அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

இந்த அறிக்கை அடிப்படையில், காவிரி வழக்கு மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (பிப்ரவரி 7) நடைபெறுகிறது.

முன்னதாக, இந்த வழக்கு கடந்த திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தபோது, ""தமிழக சம்பா சாகுபடிக்கு 9 டிஎம்சி காவிரி நீர் உடனடியாகத் தேவை" என்று தமிழகம் கேட்டுக் கொண்டது.

இதையடுத்து உச்ச நீதிமன்ற உத்தரவின் உத்தரவுப்படி, டெல்டா பாசனப் பகுதிகளை நேரில் ஆய்வு செய்த நிபுணர் குழு தனது அறிக்கையில், ""ஒரு நாள் மட்டும் பார்வையிட்ட காரணத்தால் தமிழகத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு, கருகிய பயிர்களின் நிலப்பரப்பு, தண்ணீர் தேவைப்படும் நிலப்பரப்பு ஆகியவற்றை துல்லியமாகக் கணக்கிடுவது சாத்தியமற்றது; டெல்டா பகுதிகளில் தண்ணீர் கிடைக்காததால், தமிழக விவசாயிகள் குறைவான மகசூலை ஈட்டியுள்ளனர். அதனால், சுமார் 10 சதவீத சாகுபடி பரப்பில் (ஒரு லட்சம் ஏக்கர்) உள்ள பயிர்களுக்கு மட்டும் பாசனத்துக்காக 2.44 டிஎம்சி தண்ணீர் தேவைப்படுகிறது" என்று பரிந்துரை செய்துள்ளது.

17 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையின் விவரம் வருமாறு:

**மகசூல் குறைவு:** மூன்று பேர் கொண்ட நிபுணர் குழு திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 375 கி.மீ தொலைவு பயணம் செய்து ஆய்வு நடத்தியது. பதினான்கு இடங்களில் ஆய்வு செய்யப்பட்டது. போதிய நீர் இல்லாத காரணத்தால் குறைவான மகசூலை விவசாயிகள் ஈட்டியுள்ளனர். கால்நடைகளுக்கும், வீட்டு உபயோகத்துக்கும் போதிய நீர் இல்லை என அப்பகுதிகளில் வசிக்கும் பெண்கள் எங்களிடம் முறையிட்டனர். அதை நிபுணர் குழு ஏற்றுக் கொள்கிறது.

துல்லியமாகக் கணக்கிட முடியாது: காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் ஒரு நாளில் மட்டும் பார்வையிட்டு தமிழகத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு, கருகிய பயிர்களின் நிலப்பரப்பு,

தண்ணீர் தேவைப்படும் பயிர்களின் நிலப்பரப்பு ஆகியவற்றைத் துல்லியமாகக் கணக்கிட முடியாது.

இருந்தாலும், சுமார் 50 சதவீத சாகுபடிப் பரப்பில் அறுவடை முடிந்துவிட்டதையும் 40 சதவீத பரப்பில் அறுவடைக்கு பயிர்கள் தயாராக உள்ளதையும் மதிப்பிட்டோம். அந்த வகையில், மீதமுள்ள 10 சதவீத சாகுபடிப் பரப்புக்கு (சுமார் 1 லட்சம் ஏக்கர்) மட்டும் தண்ணீர் தேவைப்படுகிறது.

**2.44 டிஎம்சி தேவை**: "நிலம்' புயலால் பாதிக்கப்பட்டு மீண்டும் பயிரிடப்பட்டுள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு மட்டும் இரண்டு முறை பாசனம் தேவைப்படுகிறது. மீதமுள்ள 45 ஆயிரம் ஏக்கருக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டியுள்ளது. அதனால், ஒரு முறை பாசனத்துக்கு 0. 71 டிஎம்சியும், இரண்டு முறை பாசனத்துக்கு 1.73 டிஎம்சியும் தேவைப்படும் என மதிப்பிடுகிறோம். ஆகையால், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் பாசன நீரை எதிர்கொண்டிருக்கும் பயிர்களுக்கு மொத்தம் 2.44 டிஎம்சி நீர் தேவைப்படுகிறது" என்று அறிக்கையில் நிபுணர் குழு குறிப்பிட்டுள்ளது.

**தமிழக அரசின் விவரம்**: ஆய்வின்போது தமிழக அரசு அதிகாரிகள் தெரிவித்த விவரங்களை அறிக்கையில் நிபுணர் குழு குறிப்பிட்டுள்ளது. அதன்படி, காவிரி நீரின் மூலம் ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் 17,11,258 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வருகின்றன.

அதில், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 2,99,607 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருக்கும் பயிர்களுக்கு ஒரு தடவை பாசனமும், 2,97,514 ஏக்கர் பயிர்களுக்கு இரண்டு முறை பாசனமும் தேவைப்படுகிறது.

**ஒரு முறை பாசனத்துக்கு 3 டிஎம்சி**; இரண்டு முறை பாசனத்துக்கு 6 டிஎம்சி என்ற அடிப்படையில் கணக்கிட்டு மொத்தம் 9 டிஎம்சி நீர் தேவைப்படுகிறது என்று தமிழக அரசு கணக்கிட்டுள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் கடந்த அக்டோபர் மாதம் வீசிய "நிலம்' புயலால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நாகப்பட்டினத்தில் 44,592 ஏக்கரும், திருவாரூரில் 10,070 ஏக்கரும், தஞ்சாவூரில் 294 ஏக்கரும் என மொத்தம் 54,956 ஏக்கர் பரப்பில் மீண்டும் சம்பா பயிரிடப்பட்டுள்ளது.

**பின்னணி**: காவிரியில் இருந்து கர்நாடகம் உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு கடந்த 4-ம் தேதி நீதிபதிகள் ஆர்.எம். லோதா, ஜஸ்தி செலமேஸ்வர், மதன் பி. லோகுர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது "கர்நாடகம் 9 டிஎம்சி நீர் திறந்துவிட வேண்டும்' என்று தமிழக அரசு வலியுறுத்தியது. இதை ஏற்க மறுத்த கர்நாடகம், தமிழகத்தின் கள நிலையை ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரியது.

இதை ஏற்று நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி, மத்திய உணவுத் துறை துணை ஆணையர் பிரதீப் குமார் ஷா, கே.எஸ். ஜேக்கப், ஏ. மகேந்திரன் ஆகிய மூவர் குழுவை மத்திய நீர் ஆணையம் நியமித்து தமிழகத்தில் களஆய்வு செய்ய அனுப்பியது.

## சம்பா சாகுபடிக்கு 2.44 டிஎம்சி தண்ணீர் போதும்

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள சம்பா சாகுபடிக்கு 2.44 டிஎம்சி தண்ணீர் போதுமானது என்று தமிழகத்தில் கடந்த இரண்டு நாள்களாக நேரில் ஆய்வு செய்த மத்திய நிபுணர் குழு உச்ச நீதிமன்றத்தில் புதன்கிழமை அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

இந்த அறிக்கை அடிப்படையில், காவிரி வழக்கு மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (பிப்ரவரி 7) நடைபெறுகிறது.

முன்னதாக, இந்த வழக்கு கடந்த திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தபோது, ""தமிழக சம்பா சாகுபடிக்கு 9 டிஎம்சி காவிரி நீர் உடனடியாகத் தேவை'' என்று தமிழகம் கேட்டுக் கொண்டது.

இதையடுத்து உச்ச நீதிமன்ற உத்தரவின் உத்தரவுப்படி, டெல்டா பாசனப் பகுதிகளை நேரில் ஆய்வு செய்த நிபுணர் குழு தனது அறிக்கையில், ""ஒரு நாள் மட்டும் பார்வையிட்ட காரணத்தால் தமிழகத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு, கருகிய பயிர்களின் நிலப்பரப்பு, தண்ணீர் தேவைப்படும் நிலப்பரப்பு ஆகியவற்றை துல்லியமாகக் கணக்கிடுவது சாத்தியமற்றது; டெல்டா பகுதிகளில் தண்ணீர் கிடைக்காததால், தமிழக விவசாயிகள் குறைவான மகசூலை ஈட்டியுள்ளனர். அதனால், சுமார் 10 சதவீத சாகுபடி பரப்பில் (ஒரு லட்சம் ஏக்கர்) உள்ள பயிர்களுக்கு மட்டும் பாசனத்துக்காக 2.44 டிஎம்சி தண்ணீர் தேவைப்படுகிறது'' என்று பரிந்துரை செய்துள்ளது.

17 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையின் விவரம் வருமாறு:

மகசூல் குறைவு: மூன்று பேர் கொண்ட நிபுணர் குழு திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 375 கி.மீ தொலைவு பயணம் செய்து ஆய்வு நடத்தியது. பதினான்கு இடங்களில் ஆய்வு செய்யப்பட்டது. போதிய நீர் இல்லாத காரணத்தால் குறைவான மகசூலை விவசாயிகள் ஈட்டியுள்ளனர். கால்நடைகளுக்கும், வீட்டு உபயோகத்துக்கும் போதிய நீர் இல்லை என அப்பகுதிகளில் வசிக்கும் பெண்கள் எங்களிடம் முறையிட்டனர். அதை நிபுணர் குழு ஏற்றுக் கொள்கிறது.

துல்லியமாகக் கணக்கிட முடியாது: காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் ஒரு நாளில் மட்டும் பார்வையிட்டு தமிழகத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு, கருகிய பயிர்களின் நிலப்பரப்பு, தண்ணீர் தேவைப்படும் பயிர்களின் நிலப்பரப்பு ஆகியவற்றைத் துல்லியமாகக் கணக்கிட முடியாது.

இருந்தாலும், சுமார் 50 சதவீத சாகுபடிப் பரப்பில் அறுவடை முடிந்துவிட்டதையும் 40 சதவீத பரப்பில் அறுவடைக்கு பயிர்கள் தயாராக உள்ளதையும் மதிப்பிட்டோம். அந்த வகையில், மீதமுள்ள 10 சதவீத சாகுபடிப் பரப்புக்கு (சுமார் 1 லட்சம் ஏக்கர்) மட்டும் தண்ணீர் தேவைப்படுகிறது.

2.44 டிஎம்சி தேவை: "நிலம்' புயலால் பாதிக்கப்பட்டு மீண்டும் பயிரிடப்பட்டுள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு மட்டும் இரண்டு முறை பாசனம் தேவைப்படுகிறது. மீதமுள்ள 45 ஆயிரம் ஏக்கருக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டியுள்ளது. அதனால், ஒரு முறை பாசனத்துக்கு 0. 71 டிஎம்சியும், இரண்டு முறை பாசனத்துக்கு 1.73 டிஎம்சியும் தேவைப்படும் என மதிப்பிடுகிறோம். ஆகையால், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் பாசன நீரை எதிர்கொண்டிருக்கும் பயிர்களுக்கு மொத்தம் 2.44 டிஎம்சி நீர் தேவைப்படுகிறது" என்று அறிக்கையில் நிபுணர் குழு குறிப்பிட்டுள்ளது.

தமிழக அரசின் விவரம்: ஆய்வின்போது தமிழக அரசு அதிகாரிகள் தெரிவித்த விவரங்களை அறிக்கையில் நிபுணர் குழு குறிப்பிட்டுள்ளது. அதன்படி, காவிரி நீரின் மூலம் ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் 17,11,258 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வருகின்றன.

அதில், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 2,99,607 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருக்கும் பயிர்களுக்கு ஒரு தடவை பாசனமும், 2,97,514 ஏக்கர் பயிர்களுக்கு இரண்டு முறை பாசனமும் தேவைப்படுகிறது.

ஒரு முறை பாசனத்துக்கு 3 டிஎம்சி; இரண்டு முறை பாசனத்துக்கு 6 டிஎம்சி என்ற அடிப்படையில் கணக்கிட்டு மொத்தம் 9 டிஎம்சி நீர் தேவைப்படுகிறது என்று தமிழக அரசு கணக்கிட்டுள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் கடந்த அக்டோபர் மாதம் வீசிய "நிலம்' புயலால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நாகப்பட்டினத்தில் 44,592 ஏக்கரும், திருவாரூரில் 10,070 ஏக்கரும், தஞ்சாவூரில் 294 ஏக்கரும் என மொத்தம் 54,956 ஏக்கர் பரப்பில் மீண்டும் சம்பா பயிரிடப்பட்டுள்ளது.

பின்னணி: காவிரியில் இருந்து கர்நாடகம் உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு கடந்த 4-ம் தேதி நீதிபதிகள் ஆர்.எம். லோதா, ஜஸ்தி செலமேஸ்வர், மதன் பி. லோகுர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது "கர்நாடகம் 9 டிஎம்சி நீர் திறந்துவிட வேண்டும்' என்று தமிழக அரசு வலியுறுத்தியது. இதை ஏற்க மறுத்த கர்நாடகம், தமிழகத்தின் கள நிலையை ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரியது.

இதை ஏற்று நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி, மத்திய உணவுத் துறை துணை ஆணையர் பிரதீப் குமார் ஷா, கே.எஸ். ஜேக்கப், ஏ. மகேந்திரன் ஆகிய மூவர் குழுவை மத்திய நீர் ஆணையம் நியமித்து தமிழகத்தில் களஆய்வு செய்ய அனுப்பியது.

### என்டோசல்பான் மீதான தடையில் மாநில அரசு உறுதி

என்டோசல்பான் மீதான தடையில் மாநில அரசு உறுதியாக உள்ளதாக, கர்நாடக சுகாதாரத் துறை அமைச்சர் அரவிந்த் லிம்பாவளி தெரிவித்தார்.

பெங்களூரில் புதன்கிழமை நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில் கேள்வி நேரத்தின் போது பாஜக உறுப்பினர் ரவிசுப்பிரமணியன் எழுப்பிய வினாவுக்கு பதில் அளித்து அவர் கூறியது: என்டோசல்பான் பூச்சிக்கொல்லி மீதான முழுத் தடையைச் செயல்படுத்துவதில் மாநில அரசு உறுதியாக உள்ளது.

தென் கன்னடம், உடுப்பி மற்றும் வட கன்னடம் மாவட்டங்களில் என்டோசல்பான் பூச்சிக்கொல்லியால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை சேகரிப்பதற்கான கணக்கெடுப்பு நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென் கன்னட மாவட்டத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 1,907 பேர் என்டோசல்பான் பூச்சிக்கொல்லியால் பாதிக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. அதேபோல, வட கன்னட மாவட்டத்தில் 383 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கேரளத்தில் உள்ளது போல என்டோசல்பான் பூச்சிக்கொல்லியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்திற்கு பதிலாக, ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்த கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது.

என்டோசல்பானால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, தென் கன்னட மாவட்டத்தில் 19 மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெல்தங்கடி வட்டம், கொக்கடா கிராமத்தில் அமைந்துள்ள பொதுசுகாதார மையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

## களியக்காவிளையில் பரவலாக மழை

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதியில் புதன்கிழமை மாலையில் பரவலாக மழை பெய்தது.

இப்பகுதியில் கடந்த சில நாள்களாக பகலில் வெயிலும், இரவில் குளிரும் நிலவியது. இந்நிலையில் களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதியில் புதன்கிழமை மாலை 4.30 மணி முதல் பரவலாக மழை பெய்தது. அரைமணி நேரம் வரை லேசான மழை பெய்ததால், இப்பகுதியில் வெப்பம் குறைந்து குளிர்ச்சி நிலவியது. பேச்சிப்பாறை, சிற்றாறு உள்ளிட்ட இடங்களில் லேசான மழைச் சாரல் பெய்தது.

## வறட்சி: கால்நடைகளுக்கு தீவனமாகும் பயிர்கள்தி.ராமகிருஷ்ணன்

கன்னியாகுமரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் குளங்கள் வற்றிய நிலையில் உள்ளதால் விளை நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள நெல்பயிர்கள் கருகிவிட்டன.

கால்நடைகளின் தீவனத்துக்காக, கருகிய பயிர்களை விற்கும்  அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

குமரி மாவட்டத்தில் பருவமழை பொய்த்து விட்ட நிலையில் அணைகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

மாவட்டம் முழுவதும் உள்ள குளங்கள் வறண்ட நிலையில் உள்ளன. கும்பப்பூ சாகுபடிக்கு பயிர் செய்து, குளங்களில் தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் நெல்பயிர்களைக் காப்பாற்ற முடியாத சூழ்நிலை மாவட்டம் முழுவதும் உள்ளது. கடைவரம்புப் பகுதியான அகஸ்தீசுவரம் வட்டத்துக்கு தண்ணீர் வரும் பிரதான கால்வாயான நாஞ்சில் நாடு புத்தனாறு கால்வாய் பல மாதங்களாக வறண்டு காணப்படுகிறது.

இங்குள்ள 25-க்கும் மேற்பட்ட முக்கிய குளங்கள் அனைத்திலுமே தண்ணீர் இல்லாத நிலையே இருந்து வருகிறது. இதனால் கன்னியாகுமரி, கொட்டாரம், அகஸ்தீசுவரம் உள்ளிட்ட பகுதிகளில் நெல்பயிர்கள் பயிராகும் மொத்தமுள்ள 350 ஹெக்டேர் விளை நிலங்களில், இந்த பருவத்தில் 220 ஹெக்டேரில் மட்டுமே நெல்பயிர் பயிரிடப்பட்டுள்ளது.

குறிப்பாக பஞ்சலிங்கபுரம், நரிக்குளம், பால்குளம், அஞ்சுகிராமம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த கன்னிப்பூ சாகுபடியும் கைகொடுக்காத நிலையில், கும்பப்பூ சாகுபடியும் பயனற்று விட்டதால் விவசாயிகள் வேதனையின் உச்சத்தில் உள்ளனர்.

பஞ்சலிங்கபுரம் பகுதியில் நெல்பயிர்கள்  ஆரம்ப நிலையிலேயே கருகி விட்டதால் விவசாயிகள் அந்த பயிரை கால்நப் டகளுக்கு தீவனமாக்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

விவசாயிகளின் வாழ்வாதாரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், நிவாரணம் வழங்கக்கோரி விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் மாவட்ட நிர்வாகத்தை அணுகியுள்ளனர்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றுள்ள மாவட்ட நிர்வாகம், உடனடியாக சார் ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் விவசாயத்துறை அதிகாரிகளை பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட உத்தரவிட்டது.

இதன்படி செவ்வாய்க்கிழமை பாதிக்கப்பட்ட பகுதிகளை அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளனர்.

இதில் 95 ஏக்கர் நிலத்தில் நெல்பயிர்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ளவை ஓரளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் குழு கணக்கிட்டுள்ளதாகத் தெரிகிறது.

பாதிக்கப்பட்ட விவசாயிகள், தங்களுக்கு முழு நிவாரணம் வழங்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தை வலியுறுத்தியுள்ளனர். இதுதவிர நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள வாழைப் பயிர்களுக்கும் தண்ணீர் இல்லை. மேலும், விவசாயிகளின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் கிணறுகளும் வற்றி வருகின்றன.

அண்மைக் காலமாக பலத்த சூறைக்காற்று வீசி வருவதால் வாழைப் பயிர்கள் வேரோடு சாய்ந்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் விவசாயிகளின் நிலைமை மிகவும் கவலையளிப்பதாகவே உள்ளது.

மிளகாய், வெண்டை, தக்காளி, கிழங்கு, வெள்ளரி போன்ற பயிர்களும் தண்ணீ ரின்றி உள்ளது.

வரும் பங்குனி மாதத்தில் கண்டிப்பாக மழை பெய்யும் என விவசாயிகள் நம்பி உள்ளனர். பங்குனியில் மழை பெய்தால் விவசாயம் பிழைக்கும். இல்லாவிட்டால் விவசாயத்தை மறந்துவிட்டு, வேறு தொழிலுக்கு மாறுவதைத் தவிர வேறு வழியில்லை என்கின்றனர் குமரி விவசாயிகள்.

## கரும்பு விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம்

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள கவுண்டர்பாளையம் கிராமத்தில், தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலை நிறுவனம் சார்பில் கரும்பு விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலை நிறுவனர் அ. சீனிவாசன் பேசியது:

ஆலையின் 2012-2013 ஆம் ஆண்டுக்கான அரவை பணி கடந்த டிச. 5-ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. ஆலையில் கரும்பு அறுவடை செய்யும் இயந்திரத்தை, விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

கூட்டத்தில் நவீன கரும்பு சாகுபடி, இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் முறை, நான்கடி, ஐந்தரை அடி அகலமும் கொண்ட பார் மற்றும் திருந்திய கரும்பு சாகுபடி முறையில் நடவு, சொட்டுநீர்ப் பாசன முறையில் கரும்பு சாகுபடி, கரும்பு வளர்ச்சி முதிர்வடைந்தால் காலதாமதமின்றி அறுவை செய்வது ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டது. கூட்டத்துக்கு செயலர் பி. நீலராஜ், நிர்வாக அலுவலர் ஆர். ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சர்க்கரை ஆலை பொது மேலாளர் அருண்குமார், உதவி பொது மேலாளர் ஜெயராமன், துணை பொது மேலாளர்கள் குணசேகரன், இளங்கோவன், கோட்ட கரும்பு அலுவலர்கள், உதவி கரும்பு ஆய்வாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## உழவர் மன்றம் தொடக்க விழா

நாகை மாவட்டம்,வேதாரண்யத்தை அடுத்த பஞ்சநதிக்குளம் கிழக்குப் பகுதியில் உழவர் மன்றத் தொடக்க விழா நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் டி. கணேஷ் தலைமையில்

செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் இந்திராணி சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். கருத்தரங்கில், நாம்கோ நிறுவன இயக்குநர் சி. ஜீவானந்தம்,தோட்டக்கலை உதவி அலுவலர்கள் வைரமூர்த்தி,எழிலரசி,இயற்கை விவசாயப் பயிற்றுநர்கள் கரிகாலன்,மணியம்மாள், செல்வராசு உள்ளிட்டோர் பேசினர். ஆர். மணிகண்டன் நன்றி கூறினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 31.67 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 31.67 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 115 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 9,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## 2 நாள்களில் 1.10 டிஎம்சி தண்ணீர் வெளியேற்றம்

காவிரி டெல்டா பாசனத்திற்காக, மேட்டூர் அணையிலிருந்து திங்கள்கிழமை இரவு முதல் புதன்கிழமை காலை வரை 1.10 டிஎம்சி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, வியாழக்கிழமை இரவுக்குள் 2 டிஎம்சி தண்ணீர் வெளியேற்றப்பட்ட பின்னர் அணை மூடப்படும் என பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நிகழாண்டில் பருவமழை கைகொடுக்காததாலும், கர்நாடகம் தமிழகத்துக்கு தண்ணீர் தர மறுத்ததாலும், மேட்டூர் அணையில் குறைந்த அளவே தண்ணீர் இருந்தது.

எனவே, கடந்த ஆண்டு, ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. மாறாக, செப்டம்பர் 17-ஆம் தேதி காவிரி டெல்டா பாசனத்துக்காக அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. அணைக்கு நீர்வரத்து இல்லாத நிலையில், நீர்மட்டம் வெகுவாகக் குறைந்தது.

இதைத் தொடர்ந்து, கடந்த டிசம்பர் 22-ஆம் தேதி பாசனத்துக்காக திறந்துவிடப்படும் நீரின் அளவு வினாடிக்கு ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. இதனால், காவிரி டெல்டா மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்குத் தேவையான தண்ணீர் போதிய அளவுக்கு கிடைக்காததால், பயிர்கள் கருகி வருகின்றன.

பயிர்களைக் காப்பாற்ற உச்ச நீதிமன்றம் காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு உடனடியாக மேட்டூர் அணையிலிருந்து 2 டிஎம்சி தண்ணீரைத் திறந்துவிட திங்கள்கிழமை உத்தரவிட்டது.

இதையடுத்து, திங்கள்கிழமை இரவு 8 மணி முதல் மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதையடுத்து, திங்கள்கிழமை காலை 9.56 டிஎம்சியாக இருந்த அணையின் நீர் இருப்பு புதன்கிழமை காலை 8மணி நிலவரப்படி 8.46 டிஎம்சியாக குறைந்தது.

நீதிமன்ற உத்தரவுப்படி, இதுவரை (புதன்கிழமை காலை 8 மணி நிலவரப்படி) 1.10 டிஎம்சி தண்ணீர் பாசனத்துக்காக வெளியேற்றப்பட்டது. வியாழக்கிழமை இரவுக்குள் 2 டிஎம்சி தண்ணீர் வெளியேற்றப்படும் என பொது ப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், அணையின் நீர்மட்டம் மளமளவெனக் குறைந்து வருகிறது. திங்கள்கிழமை காலை 34.80 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் புதன்கிழமை காலை 32.28 அடியாக குறைந்தது.

### வறட்சியால் தேயிலை விவசாயம் பாதிப்பு

குந்தா பகுதியில் நிலவும் கடும் வறட்சியால் தேயிலை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் முக்கிய தொழிலாக தேயிலை விவசாயம் உள்ளது. 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தை நம்பியுள்ளனர். குறிப்பாக மாவட்டத்தில் குந்தா பகுதியில்தான் அதிகளவில் சிறு, குறு தேயிலை விவசாயிகள் உள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பரில் தொடங்கிய பனிப்பொழிவு 3 மாதங்களுக்கும் மேலாக நீடிக்கிறது. இதனால் உறைப்பனி கொட்டி தேயிலைச் செடிகள் கருகி வருகின்றன. பகல் நேரங்களில் சமவெளி பகுதிக்கு இணையாக வெயிலின் தாக்கம் இருப்பதால், பசுந்தேயிலை மகசூல் வெகுவாகக் குறைந்துவிட்டது.

குந்தா, மஞ்சூர், பிக்கட்டி, எடக்காடு, எமரால்டு உள்பட பல்வேறு பகுதிகளில் பனி மற்றும் வெயிலின் தாக்கத்தால் தேயிலைச் செடிகள் கருகிவிட்டதால், விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பசுந்தேயிலை மகசூல் குறைந்ததால், விவசாய கூலித் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இதனால் குந்தா பகுதியை வறட்சி பாதித்த பகுதியாக மாவட்ட நிர்வாகம் அறிவித்து, விவசாயிகளுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விவசாயிகளால் தொடங்கப்படும் முதல் வேளாண் நிறுவனம்: ஈரோட்டில் பிப்.10-ல் திறப்பு: 3 அமைச்சர்கள் பங்கேற்பு



விவசாயிகளை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டு தமிழகத்தில் முதல்முறையாக ஈரோட்டில் உழவன் உற்பத்தியாளர் நிறுவனம் பிப்.10-ம் தேதி தொடங்கப்படுகிறது. இதில் 3 அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

இது குறித்து இந்நிறுவனத்தின் தலைவர் ப.நல்லசாமி, இணைத் தலைவர் துறை.வெங்கடேஸ்வரன் (எ) குமார் ஆகியோர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்:

உழவன் உற்பத்தியாளர் நிறுவனம் 1956-ம் ஆண்டு நிறுவனச்சட்டத்தின்படி தொடங்கப்பட்டுள்ளது. இதில் முதல்கட்டமாக 50 உறுப்பினர்கள் உள்ளனர். விவசாயிகள் தவிர வேறு யாரும் இதில் உறுப்பினர்களாக இருக்க இயலாது. இதில் கிடைக்கும் லாபம் அனைத்து உறுப்பினர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.மஞ்சள் உற்பத்தியில் இந்திய அளவில் ஈரோடு முக்கிய இடத்தை பிடித்துள்ளது. இருப்பினும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்றும், இடைத்தரகர்களுக்குதான் அதிக லாபம் கிடைக்கிறது என்ற பரவலான கருத்தும் இருந்து வருகிறது.

இந்நிலையில், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும் வகையில் இந்த நிறுவனத்தை தொடங்கியுள்ளோம். இதில் ஏல முறையில் முதல்கட்டமாக மஞ்சள் விற்பனை செய்யப்படும். மின்னணு ஏல முறை கடைபிடிக்கப்படும். உலகில் எந்த மூலையில் இருந்தும் இந்நிறுவனத்தில் நடைபெறும் ஏலத்தில் வியாபாரிகள் பங்கெடுக்க முடியும்.விவசாயிகள் கொண்டு வரும் மஞ்சளை தரம் பிரித்து ஏலம் விட முடிவு செய்துள்ளோம். மஞ்சள் தரம் பிரிக்க நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. இப்போது ஈரோடு சந்தையில் இதுபோல தரம் பிரித்து ஏலம் விடப்படுவதில்லை. விவசாயிகளின் மஞ்சளை இருப்பு வைக்க 5,000 டன் இருப்பு வைக்கும் வகையிலான கிடங்கு இப்போது தயாராக உள்ளது.இந்நிறுவனத்தில் சேரும் உறுப்பினர்களின்

எண்ணிக்கையை பொருத்து கூடுதல் எண்ணிக்கையில் கிடங்குகள் அமைக்கப்படும். உறுப்பினராக சேர விரும்பும் விவசாயிகள் ரூ.100 மட்டும் உறுப்பினர் கட்டணமாக செலுத்தினால் போதும்.

இந்நிறுவன திறப்பு விழா வாட்டர் ஆபீஸ் சாலையில் உள்ள ராஜகணபதி கோவில் வீதியில் பிப்.10-ம் தேதி நடைபெறுகிறது. உழவன் மஞ்சள் விற்பனை மையத்தை வேளாண் அமைச்சர் எஸ்.தாமோதரன் தொடங்கிவைத்து பொருளீட்டுக்கடன் வழங்குகிறார். விற்பனை மையத்தின் நவீன இயந்திரங்களை பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.இராமலிங்கமும், முதல் ஏல விற்பனையை வருவாய்த்துறை தோப்பு என்.டி.வெங்கடாச்சலமும் தொடங்கிவைக்கின்றனர்.விழாவில், வேளாண் உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா, மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம், ஈரோடு மேயர் ப.மல்லிகா பரமசிவம், துணை மேயர் கே.சி.பழனிசாமி மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் பங்கேற்கின்றனர் என்றனர்.பேட்டியின்போது இந்நிறுவனத்தின் உறுப்பினர் என்.சிவநேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## பாரம்பரிய பசு பாதுகாப்பு கருத்தரங்கம்

நசியனூர் அருகே கோம்பையன்வலசில் பாரம்பரிய பசு பாதுகாப்பு கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கவுந்தப்பாடி ஜெயம் பிராணிகள் நல அறக்கட்டளை, எச்டிஎப்சி வங்கி ஆகியவை இணைந்து இக்கருத்தரங்கை நடத்தின. கருத்தரங்கிற்கு பிராணிகள் நல அறக்கட்டளைத் தலைவர் கே.வி.கோவிந்தராஜ் தலைமை வகித்தார்.

பாரம்பரிய பசுக்களைப் பாதுகாக்கும் முறைகள், பசுக்களை நோயில் இருந்து பாதுகாக்கும் மூலிகை உருண்டைகளைத் தயாரிப்பது குறித்து அவர் செயல்விளக்கம் அளித்தார். அயல்நாட்டு இறக்குமதிப் பசுக்கள், கலப்பினப் பசுக்களில் இருந்து கிடைக்கும் பாலை அருந்தும்போது ரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்கள் வர வாய்ப்பிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் உலக மகளிர் உரிமைக் கழக உறுப்பினர் ஜி.ஜெயலட்சுமி, வங்கியின் கூட்டு மதிப்பு சேவை அலுவலர் டி.கதிரேசன், மகளிர் சுயஉதவிக் குழு நிர்வாகிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளே தொடங்கும் முதல் வேளாண் நிறுவனம் ஈரோட்டில் வரும் 10-ஆம் தேதி திறப்பு

விவசாயிகளை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு தமிழகத்தில் முதல்முறையாக ஈரோட்டில் உழவன் உற்பத்தியாளர் நிறுவனம் வரும் 10-ஆம் தேதி தொடங்கப்படுகிறது. இதன் துவக்க விவாவில் 3 அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

இதுகுறித்து இந்நிறுவனத்தின் தலைவர் ப.நல்லசாமி, இணைத் தலைவர் டி.வெங்கடேஸ்வரன் (எ) குமார் ஆகியோர் செய்தியாளர்களுக்கு புதன்கிழமை அளித்த பேட்டி:

உழவன் உற்பத்தியாளர் நிறுவனம் 1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின்படி தொடங்கப்பட்டுள்ளது. இதில் முதல்கட்டமாக 50 உறுப்பினர்கள் உள்ளனர். விவசாயிகள் தவிர வேறு யாரும் இதில் உறுப்பினராக இயலாது. இதில் கிடைக்கும் லாபம் அனைத்து உறுப்பினர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.

மஞ்சள் உற்பத்தியில் தேசிய அளவில் ஈரோடு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இருப்பினும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்றும், இடைத்தரகர்களுக்குத் தான் அதிக லாபம் கிடைக்கிறது என்றும் பரவலான கருத்தும் இருந்து வருகிறது.

இந்நிலையில், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும் வகையில் இந்த நிறுவனத்தைத் தொடங்கியுள்ளோம். இதில் ஏல முறையில் முதல்கட்டமாக மஞ்சள் விற்பனை செய்யப்படும். மின்னணு ஏல முறை கடைபிடிக்கப்படும். உலகில் எந்த மூலையில் இருந்தும் இந்நிறுவனத்தில் நடைபெறும் ஏலத்தில் வியாபாரிகள் பங்கெடுக்க முடியும்.

விவசாயிகள் கொண்டுவரும் மஞ்சளைத் தரம் பிரித்து ஏலமிட முடிவு செய்துள்ளோம். மஞ்சளைத் தரம் பிரிக்க நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. இப்போது ஈரோடு சந்தையில் இதுபோல தரம் பிரித்து ஏலம் விடப்படுவதில்லை. விவசாயிகளின் மஞ்சளை இருப்பு வைக்க 5,000 டன் இருப்பு வைக்கும் வகையிலான கிடங்கும் இப்போது தயாராக உள்ளது.

இந்நிறுவனத்தில் சேரும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொருத்து கூடுதல் எண்ணிக்கையில் கிடங்குகள் அமைக்கப்படும். உறுப்பினராகச் சேர விரும்பும் விவசாயிகள் ரூ. 100 மட்டும் உறுப்பினர் கட்டணமாகச் செலுத்தினால் போதும்.

இந்நிறுவனத்தின் திறப்பு விழா வாட்டர் ஆபீஸ் சாலையில் உள்ள ராஜகணபதி கோவில் வீதியில் வரும் 10-ஆம் தேதி நடைபெறுகிறது. உழவன் மஞ்சள் விற்பனை மையத்தை வேளாண் அமைச்சர் எஸ்.தாமோதரன் தொடங்கிவைத்து பொருளீட்டுக் கடன் வழங்குகிறார்.

விற்பனை மையத்தின் நவீன இயந்திரங்களை பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி.இராமலிங்கமும், முதல் ஏல விற்பனையை வருவாய்த் துறை தோப்பு என்.டி.வெங்கடாசலமும் தொடங்கி வைக்கின்றனர்.

இவ்விழாவில், வேளாண் உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா, மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம், ஈரோடு மேயர் ப.மல்லிகா பரமசிவம், துணை மேயர் கே.சி. பழனிசாமி மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் பங்கேற்கின்றனர் என்றனர்.

பேட்டியின்போது இந்நிறுவனத்தின் உறுப்பினர் என்.சிவநேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 43.68 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 200 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,683 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் 500 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. நீர் இருப்பு 3.09 டி.எம்.சி.

### தாராபுரம் உழவர் சந்தையில் ரூ.11.27 கோடி காய்கறி விற்பனை

தாராபுரம் உழவர் சந்தையில் கடந்த ஆண்டு ஏப்ரல்முதல், ஜனவரி வரை ரூ.11.27 கோடி மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சந்தையின் நிர்வாக அலுவலர் க.குருபர காங்கேயன் புதன்கிழமை விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

தாராபுரம் அண்ணா நகரில் செயல்பட்டு வரும் உழவர் சந்தையில் தாராபுரம், குண்டடம் மற்றும் மூலனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உள்பட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து விவசாயிகள் விளை பொருள்களை கொண்டு வந்து விற்கின்றனர். 2012 ஏப்ரல் முதல் 2013 ஜனவரி வரை 6,405 டன் காய்கறிகளை 38,535 விவசாயிகள் விற்பனை செய்துள்ளனர். இதன் மூலமாக 8 லட்சம் நுகர்வோர்கள் பயன்பெற்றுள்ளனர். கடந்த ஜனவரியில் மட்டும் 697 டன் காய்கறிகளை 4,016 விற்பனை செய்துள்ளனர். இதன் மதிப்பு ரூ.1.17 கோடி. இதன் மூலமாக 86 ஆயிரம் நுகர்வோர் பயன்பெற்றுள்ளனர்.

## விவசாயிகள் சங்க மாவட்டக் குழு கூட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் சங்க மாவட்ட துணைத் தலைவர் ஆர்.ஞானவாசகம் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் துணைச் செயலாளர்கள் ஏ.நாகநாதன், எஸ்.முருகேசன், என்.ரெங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் ஏ.முத்துராமு, பொருளாளர் ஐ.ஜெயராஜ் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினர்.

ராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும், ஒரு ஏக்கர் நெல் விவசாயம் பாதித்த விவசாயிக்கு ரூ.25 ஆயிரமும், மிளகாய் விவசாயிக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரமும் நிவாரணமாக வழங்கிட வேண்டும். கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி பிப்ரவரி 18 முதல் 25 ஆம் தேதி வரை தொடர் இயக்கம் நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## இரை இன்றி உயிரிழக்கும் ஈமு கோழிகள்

கள்ளக்குறிச்சி அருகே, சேலம்-சென்னை நெடுஞ்சாலையோரம் உள்ள பராமரிப்பற்ற ஈமு கோழிப் பண்ணையில் இருந்து வெளியேறும், ஈமு கோழிகள் இரை இன்றியும் நாய் உள்ளிட்ட விலங்குகளால் வேட்டையாடப்பட்டும் உயிரிழந்து வருகின்றன. இதனால் எழும் துர்நாற்றம் காரணமாக அப்பகுதியில் நோய் அபாயம் நிலவுகிறது.

விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் தாலுகாவைச் சேர்ந்த அம்மையகரம் கிராமத்தில் சாலையோரம் தனியார் ஈமு கோழிப்பண்ணை கடந்த ஒரு வருடமாக செயல்பட்டு வந்தது.

கடந்த சில நாட்களாக அந்த பண்ணை அலுவலகம் மூடிய நிலையில் உள்ளது. அங்கிருந்த பெயர்ப்பலகையும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பண்ணையில் சுமார் 100க்கும் மேற்பட்ட ஈமு கோழிகள் வளர்ந்து வருகின்றன.

தற்போது பராமரிப்பின்றி காணப்படும் அந்த பண்ணையின் அருகே சாலையின் ஓரத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட ஈமு கோழிகள் உயிரிழந்து கிடக்கின்றன. இரை இன்றியும் நாய் உள்ளிட்ட விலங்குகளால் வேட்டையாடப்பட்டும் உயிரிழந்து வருவதாக தெரிகிறது. இதனால் வீசும் துர்நாற்றம் காரணமாக அப்பகுதியில் நோய் பரவும் அபாயம் உள்ளது.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், தமிழகத்தில் ஈமு கோழிப் பண்ணைகள் மூலம் நடைபெற்ற மோசடிகளைத் தொடர்ந்து, மக்களின் முதலீடு குறைந்து ஈமு பண்ணைகள் மூடப்பட்டு வருகின்றன.

மோசடிகளில் தொடர்புடைய, பராமரிப்பின்றி உள்ள ஈமு பண்ணைகள் கால்நடைத்துறை மூலம் பராமரிக்கப்பட்டு வந்தன. இங்குள்ள பண்ணை, பராமரிப்பு இல்லாததுபோல் தெரிகிறது. இங்கிருந்து இரை தேடி வெளியே வரும் ஈமு கோழிகள் இரை இன்றி உயிரிழந்து வருவது தொடர்கிறது.

தொடர் உயிரிழப்பு மற்றும் இப்பகுதியில் நோய் அபாயத்தை தவிர்க்க ஈமு கோழிப்பண்ணையை பராமரிக்க கால்நடைத்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

## விவசாயப் பருவக் கடன் திட்டத்துக்கு வங்கிகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

இன்றைய கால கட்டத்தில் விவசாயப் பருவக் கடன் திட்டத்துக்கு வங்கிகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என தமிழக நிதித் துறை செயலர் கே. சண்முகம் வலியுறுத்தினார்.

நபார்டு வங்கி ஏற்பாடு செய்திருந்த மாநில அளவிலான கடன் திட்டத்துக்கான ஆண்டு கருந்தரங்கு சென்னையில் புதன்கிழமை நடைபெற்றது. கருத்தரங்கைத் தொடங்கிவைத்த தமிழக நிதித் துறை செயலர் கே. சண்முகம் பேசியது:

மாநிலத்தின் தொலைநோக்கு ஆவணம் 2023-ன் அடிப்படையில், வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மழை குறைந்து வருவதால், பணப் பயிர்களுக்கும், தோட்டப் பயிர்களுக்கும் முக்கியத்துவம் அளித்து ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றன.

வேளாண் பரப்பு வெகுவாகக் குறைந்துவிட்டது என்ற போதும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தேவைக்கு அதிகமாகவே உணவு தானியங்களையும், காய்கறிகளையும் உற்பத்தி செய்ய முடியும். எனவே, குறைந்த நிலம், மனித ஆற்றல் மற்றும் குறைந்த முதலீட்டில் அதிகபட்ச உற்பத்தி என்பதில் கவனம் செலுத்துவதுதான் இன்றைய அவசியம்.

இதற்கு உதவும் வகையில் பருவக் கடன் திட்டத்துக்கு வங்கிகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

விவசாயிகள் பலன் பெறும் வகையில் கொள்முதல் விலைக்கும், சில்லறை விற்பனை விலைக்கும் உள்ள இடைவெளியை குறைப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

கால்நடை வளர்ப்பு விவசாயிகளுக்கு கூடுதல் வருவாயைக் கொடுக்கும். எனவே, கோழி வளர்ப்பு, நாட்டுப் பறவைகள் வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் பால்பண்ணை அமைத்தலுக்கு தாராளமாக கடன் தர வங்கிகள் முன்வர வேண்டும்.

நாமக்கல் மாவட்டத்தைப் போல், பிற பகுதிகளிலும் கோழிப் பண்ணைகளை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

நபார்டு வங்கியின் தலைமைப் பொது மேலாளர் லலிதா வெங்கடேசன், சென்னை ரிசர்வ் வங்கியின் பிராந்திய இயக்குநர் என்.எஸ். விஸ்வநாதன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் செயல் இயக்குநர் ஏ.கே. பன்சால், பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் கீர்த்திவாசன் ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

07.02.2013 A.M

## விவசாயிகளுக்கு விதை மானியம் வழங்க ரூ.78 லட்சம் நிதி ஒதுக்கீடு

தேனி: விவசாயிகளுக்கு விதை மானியம் வழங்க, 78 லட்சத்து 91 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில், விவசாயிகள் காய்கறிகள், பழக்கன்றுகள் நடுவதற்கு 50 சதவீத மானிய விலையில் விதைகள் வழங்கப்படுகின்றன. வீரிய ஒட்டுரக தக்காளி விதை, கிலோ 52 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மல்லித்தழை விதை கிலோ 259 ரூபாய்க்கும், வெண்டைக்காய் விதைகள் 354 ரூபாய்க்கும், அரைக்கீரை விதைகள் 310 ரூபாய்க்கும், சிறுகீரை விதைகள் 200 ரூபாய்க்கும், தண்டுக்கீரை விதைகள் 210 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இந்த ரக விதைகள் அனைத்தும், தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 2 ஏக்கருக்கு தேவையான விதைகள் வழங்கப்படுகின்றன. இவற்றிற்கு 50 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. இதற்காக தேனி மாவட்ட தோட்டக்கலைத்துறைக்கு, 78 லட்சத்து 91 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள், விதைகளை வாங்கி பயனடையலாம், என தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் தெரிவித்துள்ளார்.

## நெற் பயிரில் குலை நோய் விவசாயிகளுக்கு "அட்வைஸ்'

திருநெல்வேலி:நெற் பயிரில் குலை நோயை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாளை வேளாண்மை உதவி இயக்குனர் மகாலிங்கம் தெரிவித்துள்ளதாவது:

பாளை வட்டாரம் முன்னீர்பள்ளம், தருவை கிராமங்களில் நடவு செய்யப்பட்டுள்ள பிசான பருவ நெல் வயல்களில் ஆங்காங்கே குலை நோய் பரவியுள்ளது. இந்த நோயானது இலைகளில் நீண்ட கண் வடிவ புள்ளிகள் ஆரம்பத்தில் தோன்றும். மையப் பகுதி சாம்பல் நிறமாகவும், அதனை சுற்றி பழுப்பு நிறமாகவும் இருக்கும். நாளடைவில் இப்புள்ளிகள் இணைந்து பெரும் புள்ளிகளாக மாறும். நோய் தாக்குதல் அதிகமானால் பயிர் வளர்ச்சி குன்றி இலைகள் காய்ந்து விடும். நெல் மணிகள்

பால் பிடிக்காமல் பதராகி விடும்.
குலை நோய் அறிகுறிகள் தென்பட்ட உடன் யூரியா போன்ற தழைச் சத்து உரம் இடுவதை தவிர்க்க வேண்டும். இந்நோயை கட்டுப்படுத்த டிரைசக்ஸ்சோல் என்ற பூஞ்சான மருந்தை ஏக்கருக்கு 120 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர் தூரில் படும்படி காலை அல்லது மாலையோ தெளிக்க வேண்டும். தெளிக்கும் முன் நிலத்தில் தண்ணீரை வடித்து விட வேண்டும்.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நெல்லில் பூச்சி நோய்களை அழிக்க கோவிந்தபேரியில் செயல்விளக்கம்

தென்காசி:நெற்பயிரில் ஏற்படும் பூச்சி நோய்களை அழிக்க கோவிந்தபேரியில் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.
கடையம்வட்டாரம் கோவிந்தபேரியில் வேளாண் உதவி இயக்குனர் ராஜசேகர் தலைமையில் விவசாயி வயலில் பூச்சி நோய்களை அழிக்க இயற்கை பூச்சி விரட்டி தெளிக்கும் செயல்விளக்கம் நடந்தது. இதில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.
வேளாண் அலுவலர் வளர்மதி இயற்கை வழி பண்ணையம் செய்வதினால் உண்டாகும் நன்மைகளையும், நஞ்சு இல்லா உணவு உற்பத்தியின் அவசியம் குறித்து பேசினார். அட்மா சேர்மன் நடராஜன் 14 வகையான மூலிகைகளை கொண்டு எவ்வாறு பூச்சி விரட்டிகளை தயாரிக்கலாம் என செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.
இதில் அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் இசைபிரியா, வல்லுநர்கள் பொன்ஆசீர், சந்திரன், கோவிந்தபேரி விஏஓ., அமுதா, வேளாண் உதவி அலுவலர் ஜெகதீஸ்வரன் கலந்து கொண்டனர்.
துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## நெல்லில் அதிக விளைச்சல் பெற விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம்

தென்காசி;நெல்லில் அதிக விளைச்சல் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.
கடையம் வட்டம் கல்யாணிபுரத்தில் விவசாயிகள் வயலில் வேளாண் உதவி இயக்குனர் தலைமையில் செயல்விளக்கம் நடந்தது. வேளாண் அலுவலர் வளர்மதி, துணை வேளாண் அலுவலர் சுப்பிரமணியன், அட்மா சேர்மன் நடராஜன் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் இசைபிரியா கலந்து கொண்டனர்.
ஆரோக்கியமான உணவு உட்கொள்ள "இயற்கை வழி பண்ணையம் அவசியம்' என வேளாண்

உதவி இயக்குனர் ராஜசேகர் தெரிவித்தார். அட்மா சேர்மன் நடராஜன் நெல் பயிர்களுக்கு பஞ்சகாவ்யா தெளிப்பதன் மூலம் உண்டாகும் நன்மைகளை செயல்விளக்கமாக செய்து காண்பித்தார். மேலும் பூச்சிவிரட்டி, பனம்பழம் டானிக், மீன் அமினோ அமிலம் போன்ற இயற்கை பூச்சி கொல்லிகள் மற்றும் பயிர் ஊக்கிகள் பயன்படுத்துவதன் மூலம் பெருகும் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். உதவி வேளாண்மை அலுவலர் திரவியம் நன்றி கூறினார். ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் பொன்ஆசீர், சந்திரன் செய்திருந்தனர்.

## தென்னையில் சிகப்பு கூன் வண்டு கட்டுப்படுத்தும் செயல் விளக்க முகாம்

தென்காசி:ராஜகோபாலப்பேரியில் தென்னையில் சிகப்பு கூன் வண்டு கட்டுப்படுத்தும் செயல் விளக்க முகாம் நடந்தது.

தென்னை மரங்களில் தேங்காய் உற்பத்தி குறைவதற்கு பூச்சி நோய் தாக்குதல் முக்கிய காரணமாகும். தென்னையை தாக்கும் பூச்சிகளில் சிகப்பு கூன் வண்டு முக்கியமானதாகும். இந்த வண்டு தாக்கப்பட்ட மரங்களில் தேங்காய் உற்பத்தி குறைவதுடன் மரம் நாளடைவில் முழுவதுமாக காய்ந்து விடும்.

கூன் வண்டு தாக்கப்பட்ட மரங்களில் தண்டு பகுதியில் சிகப்பு நிற நீர் வடிந்து கொண்டிருக்கும். தாக்குதல் அதிகமாக உள்ள மரங்களில ஓலைகள் காய்ந்து தொங்கும். நாளடைவில் குருத்து முழுவதுமாக காய்ந்து சாய்ந்து விடும்.

இந்த வகை பூச்சிகள் மரத்தின் தண்டுப்பகுதியில் நாம் ஏற்படுத்தும் சிறு கீறல்கள், ஓட்டைகள் மூலம் முட்டையிட்டு, தென்னை மரத்தினுள் முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் தண்டுப் பகுதியை சாப்பிட்டு முழு வளர்ச்சி அடைந்த பூச்சிகளாக மாறி விடுகிறது. பின் இவை தென்னை மரத்தின் உட்புற தண்டு பகுதியை சாப்பிடுவதால் மரத்திற்கு தேவையான சத்துக்கள், நீர் கிடைக்காமல் மரம் காய்ந்து பட்டுப்போய் விடுகிறது.

இதனால் சிகப்பு கூன் வண்டுகளை கட்டப்படுத்த வேளாண்மை துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன்படி சிகப்பு கூன் வண்டு தாக்குதலிலிருந்து தென்னை மரங்களை பாதுகாக்க அட்மா திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்க முகாம் ராஜகோபாலப்பேரியில் நடந்தது. மாரிராஜ் தோப்பில் நடந்த இம்முகாமிற்கு பஞ்.,தலைவர் ஜாண் தலைமை வகித்தார்.

கீழப்பாவூர் வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராஜா அட்மா திட்டம் குறித்தும், செயல் விளக்கம் பற்றியும் விளக்கினார்.

வேளாண்மை அலுவலர் ராமர் தென்னை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த தொழில் நுட்ப விளக்க உரையாற்றினார். அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜாய் பத்ம தினேஷ் சிகப்பு கூன் வண்டு கட்டுப்படுத்த பயன்படுத்தும் இனக்கவர்ச்சி பொறி செயல்பாடு குறித்து செயல் விளக்கம் செய்து காட்டினார்.

முகாமில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை அட்மா தொழில் நுட்ப வல்லுநர்கள் சந்திரன், திருமலைப் பாண்டியன் செய்திருந்தனர்.

## வேளாண் மாணவர்களுக்கு வானிலை மாற்ற கருத்தரங்கு

கோவில்பட்டி: கோவில்பட்டி வேளாண் பட்டயப்படிப்பு மாணவர்களுக்கு வானிலை மாற்ற கருத்தரங்கு நடந்தது.

கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் பட்டயப்படிப்பு மாணவ மாணவிகளுக்கு வானிலை மாற்றம் குறித்த கருத்தரங்கம் நடந்தது. புதுடெல்லி இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக அகில இந்திய வேளாண் வானிலை ஆராய்ச்சி திட்டத்தின் சார்பில் நடந்த பயிற்சிக்கு வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் ஜவகர் தலைமை வகித்து கருத்தரங்கை துவக்கி வைத்து பேசினார். உதவி பேராசிரியை சுப்புலட்சுமி வரவேற்றார். இதையடுத்து வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் பேசினார். அப்போது அவர் பேசியதாவது, உலகளவில் ஏற்பட்டு வரும் மாற்றம் குறித்தும், அதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் தடுக்கும் வழிமுறைகள் குறித்தும் பேசினார்.

மேலும் ஆர்டிக், அண்டாடிகா மற்றும் கிரீன்லாந்து போன்ற பனிப்பிரதேசங்களில் கோடையில் பனி உருகும் பரப்பளவு கடந்த சுமார் 25 ஆண்டுகளில் 50 சதவீதம் அதிகரித்து உள்ளது. இவ்வாறு பனிப்படலங்கள் உருகும்போது கடல் மட்டம் 20 ஆண்டுகளுக்கு ஒருமீட்டர் என்ற வீதத்தில் தொடர்ந்து உயர்வதால், உலகிலுள்ள நூற்றுக்கணக்கான நகரங்களுக்கு பெரும் அழிவாக அமையும். ஆகவே நமது அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்கும் சிறியளவு காரியங்கள் பெருமளவு கரியமில வாயு மற்றும் மாசுக்களை கட்டுப்படுத்தும் என்றும், சுற்றுச்சூழல் வெப்பமடைவதை தடுக்க முடியுமென்றும், மரங்கள் அதிகளவில் வளர்க்க வேண்டுமென்றும் பேசினார். தொடர்ந்து உதவி பேராசிரியர் சோலைமலை, முதுநிலை ஆராய்ச்சியாளர் அசோக்குமார் உள்பட பலர் பல்வேறு தலைப்புகளில் பேசினர். கருத்தரங்கில் வேளாண்

பட்டயப்படிப்பு படிக்கும் சுமார் 90க்கும் அதிகமான மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### தண்ணீரை விலைக்கு வாங்கி பாசனம்

பாப்பிரெட்டிப்பட்டி: பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா பகுதியில், சாகுபடி செய்துள்ள குச்சி கிழங்கு பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் டிராக்டரில் தண்ணீரை விலைக்கு வாங்கி பாசனம் செய்து வருகின்றனர்.

தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய வறட்சியான மாவட்டங்களில் ராமநாதபுரம், தர்மபுரியும் முக்கியமானவையாகும்.

தர்மபுரி மாவட்டம் முழுவதும், மலையும், மலை சார்ந்த பகுதியாக உள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள மக்களின் முக்கிய தொழில் விவசாயம் இருந்து வருகிறது. விவசாயத்தை நம்பியே இம்மாவட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதிகப்படியான இம்மாவட்ட மக்கள் மேட்டு நிலங்களையே சொந்தமாக வைத்துள்ளனர். ஆகவே அனைவரும் பருவமழையை நம்பியே உள்ளனர்.

மாவட்டத்தில் அதிகளவு நெல், கரும்பு, மஞ்சள், காய்கறிகள், பூக்கள் போன்றவைகள் பயிரிடப்படுகின்றன. மேட்டுபாங்கான நிலத்தில் சோளம், மரவள்ளி கிழங்கு, பருத்தி, சாமை, வரகு, எள் போன்றவைகள் பயிரிடப்படுகின்றனர்.

இவைகள் அனைத்துமே கிணற்று பாசனம், ஏரி பாசனம், பருவமழையை நம்பியே பயிரிடப்படுகிறது. கிணற்று பாசனம் மூலம் ஓரளவுக்கு பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு பகுதியில் விவசாய நிலங்கள் பயன்யடைந்தாலும், மொரப்பூர், அரூர், பென்னாகரம் போன்ற பகுதியில் கடும் வறட்சியால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

பருவமழையை நம்பி கடத்தூர், பொம்மிடி, மொரப்பூர், சிந்தல்பாடி, குருபரஹள்ளி, சோளக்கொட்டாய், சுங்கரஹள்ளி, நத்தமேடு, மோட்டாங்குறிச்சி, பொம்மிடி, சில்லாரஹள்ளி போன்ற பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் மரவள்ளிக்கிழங்கு குச்சி நடப்பட்டுள்ளது. ஆனால், பருவமழை பொய்த்து போனதால் நடப்பட்ட குச்சியை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

வானம் பார்த்த பூமியாக எங்கு பார்த்தாலும் கிழங்குகள் காய்ந்து கருகும், மண்ணிலே புதைந்து போகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. முளைத்து வரும் குச்சியை காப்பாற்ற டிராக்டரில் ஒரு லோடு தண்ணீர், 600 ரூபாய் கொடுத்து விவசாயிகள் வாங்கி மரவள்ளி கிழங்கு பயிரை காப்பாற்ற

போராடி வருகின்றனர்.

வாரம் ஒருமுறை டிராக்டரில் தண்ணீர் விலைக்கு வாங்கி ஊற்றப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் பல பகுதிகளில் குறிப்பாக பென்னாகரம், மொரப்பூர், பொம்மிடி, கடத்தூர் போன்ற பகுதிகளில் இதுபோன்ற கடுமையான வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சுற்றுச்சூழல், மாசுபடுவதாலும், மழை பெய்யும் போது போதுமான அளவு மழைநீர் பூமியில் சேமிக்க முடியாமல் பூமி மாசுபட்டிருப்பதாலும் நிலத்தடி நீர் கேள்விக்குறியாகியுள்ளது. கடும் வறட்சியால் தற்போது, உணவு பயிர்களான சோளம், தடினிக்காய், எள் போன்றவைகளையும், சாமை, வரகு போன்றவைகளையும் பயிரிடுவதை விவசாயிகள் நிறுத்தி விட்டனர்.

## ஏலத்தில் கொப்பரை விலை வீழ்ச்சி விற்காமல் வியாபாரிகள் புறக்கணிப்பு

கோபிசெட்டிபாளையம்: கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், கொப்பரை விலை வீழ்ச்சியடைந்தது.

பவானிசாகர் அணை பாசன பகுதிகளான கோபி, அத்தாணி, டி.என்.பாளையம், நம்பியூர், குன்னத்தூர், கொங்கர்பாளையம், கொடிவேரி, கடத்தூர், பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, சிறுவலூர், கொளப்பலூர், குருமந்தூர் உள்ளிட்ட பகுதிகளில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. கோபி பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் பருப்புக்கு, கேரளா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் உள்ள தேங்காய் எண்ணெய் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாதந்தோறும் தமிழகத்தில் விருதுநகர், திருநெல்வேலி உள்ளிட்ட பல மாவட்டங்களில் இருந்து தேங்காய் பருப்பை கேரளாவைச் சேர்ந்த ஆலை உரிமையாளர்கள், வியாபாரிகள் கொள்முதல் செய்ய கோபிக்கு வருகின்றனர்.

கடந்த மூன்று மாதங்களாக தேங்காய் பருப்பு சராசரியாக கிலோ ஒன்றுக்கு, 45 முதல், 47 ரூபாய் வரை விற்பனையாகிறது. கடுமையான வெயிலால் தென்னை மரங்கள் காய துவங்கி உள்ளன. தேங்காய் உற்பத்தி சரிவாக காணப்படுகிறது. வெயில் காரணமாக தேங்காய் பருப்பை அதிகளவில் உற்பத்தி செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுப்பட்டுள்ளனர்.

கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடப்பு வாரம், தேங்காய் பருப்பு கிலோவுக்கு அதிகப்பட்சம், 47.69 ரூபாய்க்கு விற்பனையானது. நடப்பு வாரம் ஏலத்துக்கு, 80க்கும் மேற்பட்ட விவசாயிகள், 430 மூட்டை தேங்காய் பருப்பு கொண்டு வந்தனர். ஆனால், கடந்த வாரத்தைவிட நடப்பு வாரம் தேங்காய் பருப்பு கிலோவுக்கு நான்கு ரூபாய் வரை வீழ்ச்சியடைந்தது. இதனால் விரக்தியடைந்த விவசாயிகள், கொப்பரை விற்பனை செய்யாமல் புறக்கணிப்பு செய்தனர்.

விவசாயிகள் கூறியதாவது:

பருவமழை பொய்த்ததால் விவசாயிகள் பெரும் கவலையில் உள்ளனர். தென்னை மரங்களில் தென்னை உற்பத்தி குறைவாக உள்ளது. பல்வேறு சிரமங்களுக்கு இடையில் கொப்பரை உற்பத்தி செய்து கொண்டு வந்தால் வியாபாரிகள் குறைந்த விலைக்கு கேட்கின்றனர். இதனால் கொப்பரை விற்பனை செய்யவில்லை, என்றனர்.

## வாய்க்காலை தூர்வார விவசாயிகள் கோரிக்கை

க.பரமத்தி: "நொய்யல் ஆத்துப்பாளையம் அணை வாய்க்காலை தூர்வார, பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, ஆத்துப்பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நொய்யல் ஆத்துப்பாசன அணை கடந்த, 1985ம் ஆண்டு கார்வழி பஞ்சாயத்துக்குட்பட்ட அத்தப்ப கவுண்டன் வலசில், 160 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டது. இதன் மூலம், கரூர் மாவட்டத்தில் உள்ள, 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தது. கடந்த, 2000ம் ஆண்டுக்கு பின், திருப்பூர் சாயக்கழிவு நீரால் விவசாய நிலங்கள் நச்சுதன்மையாக மாறியது. இதனால், பாசன விவசாயிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தால், 2005ம் ஆண்டு முதல் சாயக்கழிவு நீர் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், பொதுப்பணித்துறையினர் கடந்தாண்டு அணையை ஆய்வு செய்து, திருப்பூர் மாவட்ட மலையத்தாபாளை யம் கரையில் தேங்கிய மழைநீரை அணையில் சேமித்து, கடந்த ஜூன் மாதம் ஒருபோக விளைச்சலுக்கு தண்ணீரை திறந்து விட்டனர். ஆனால் வாய்க்காலில் முட்புதர்கள் அதிகளவில் இருந்ததால், கடைமடை விவசாய நிலங்களுக்கு தண்ணீர் செல்லவில்லை.

எனவே, "நொய்யல் ஆத்துப்பாசன அணையின் வாய்க்காலை உடனடியாக தூர்வாரினால், தண்ணீர் திறக்கும் போது, விவசாய நிலங்கள் பயன்பெறும்' என, விவசாயிகள், பொதுப்பணித் துறையினருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கள்ளக்குறிச்சி பருத்தி சந்தை ரூ.2.50 கோடிக்கு கொள்முதல்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பருத்தி வார சந்தையில் நேற்று 2 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி வார சந்தை நடந்தது. விழுப்புரம், கடலூர், சேலம், திருவண்ணாமலை, பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த 1,026 விவ

சாயிகள் 15,000 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம் செய்தனர். எல்.ஆர்.ஓ., பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் 4,431ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 3,989க்கும் விலை போனது. சுவீன் ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் 5,289க்கும், குறைந்தபட்சம் 4,959க்கும் விலை போனது. நேற்று நடந்த சந்தையில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது.

## தியாகதுருகம் பகுதிகளில் விற்பனைக்கு வந்த தர்பூசணி

தியாகதுருகம்: கோடை காலம் துவங்க உள்ள நிலையில் முன்கூட்டியே தியாகதுருகம் பகுதிகளில் தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளது. பருவமழை பொய்த்ததால் நீர்நிலைகள் நீரின்றி வறண்டு கிடக்கிறது, இதனால் கோடை காலம் துவங்குவதற்கு முன்பே வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. கோடை காலம் துவங்குவதற்கு முன்பே பகலில் வெயிலின் தாக்கம் உள்ளது. அதையொட்டி உடலுக்கு குளிர்ச்சியூட்டும் தர்பூசணி பழங்கள் சீசனுக்கு முன்கூட்டியே தியாகதுருகம் பகுதிகளில் அதிக அளவில் விற்பனைக்கு வந்துள்ளது. மழையளவு குறைந்ததால் தர்பூசணி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால், இந்த ஆண்டு கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. ரிஷிவந்தியம் அடுத்த பல்லவாடி பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள இந்த பழங்கள் கிலோ 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டை விட ஒரு பழத்திற்கு 10 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

## தோட்டக்கலை பயிர் சாகுபடியில் திண்டிவனம் பகுதி விவசாயி ஆர்வம்

திண்டிவனம்: திண்டிவனம் அருகே பயிர் செய்துள்ள கோஸ், ஹைபிரேடு பைத்தங்காய் செழித்து வளர்ந்துள்ளது. திண்டிவனம் அடுத்த சிங்கனூர் கிராமத்தை சேர்ந்தவர் குமாரசாமி,55. விவசாயியான இவர் அப்பகுதியில் ஒரு நிலத்தை குத்தகைக்கு எடுத்து, பயிர் செய்து வருகிறார். இவரது நிலத்தில் குறுகிய காலத்தில் அறுவடை செய்யப்படும், தோட்டக்கலை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டிவருகிறார். தற்போது, இவர் தனது நிலத்தில் கோஸ், ஹைய்பிரேடு பைத்தங்காய், மிளகாய், முள்ளங்கி உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்துள்ளார். இதில் 110 நாள் பயிரான கோஸ் அறுவடையின்போது, கோஸ் ஒன்று 1 முதல் ஐந்து கிலோ வரையில் எடை இருக்குமென விவசாயி கூறினார். இதனை ஒரு கிலோ 5 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையில் விற்பனை செய்கின்றனர். மேலும், ஹைபிரேடு பைத்தங்காய் ஒரு கிலோ 35 ரூபாய் வரை யில் விற்பனை

செய்யப்படுகிறது. இங்கு அறுவடை செய்யப்படும் பொருட்கள் புதுச்சேரி மார்க்கெட்டில் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.

## வேளாண்துறை சார்பில் விவசாய கண்காட்சி

நாமக்கல்: நாமக்கல் யூனியன், கீழ்சாத்தம்பூரில், அட்மா விவசாய கண்காட்சி நடந்தது. வேளாண் துறை சார்பில், கருத்துக்காட்சி அமைக்கப்பட்டது. நெல், ஏ.ஆர்.டி., துவரை, மக்காச்சோளம் போன்ற பயிர்கள் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தது.

மேலும், இக்கண்காட்சியில். பருத்தி பஞ்சு எடுக்கும் கருவியின் பயன்பாடு குறித்து, செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இக்கண்காட்சியை, தமிழக தொழில் துறை அமைச்சர் தங்கமணி துவக்கி வைத்தார். மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன், எம்.எல்.ஏ., பாஸ்கர், வேளாண் இணை இயக்குனர், அரசு அதிகாரிகள் பார்வையிட்டனர்.

கண்காட்சியில், 25 சதவீதம் மானியத்தில் பருத்தி பஞ்சு எடுக்கும் கருவி, 50 சதவீதம் மானியத்தில் களைக்கொல்லி, இரண்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

## நிலக்கடலை ஏற்றுமதி ரூ.2,808 கோடி



புதுடில்லி:நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான, எட்டுமாத காலத்தில், நாட்டின்,நிலக்கடலை ஏற்றுமதி,அளவின் அடிப்படையில், 3.70 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது. இதன் மதிப்பு, 2,808 கோடி ரூபாயாகும் என, மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**தமிழகம்:**உள்நாட்டில், ஆந்திரா, பீகார், குஜராத், அரியானா, உத்தர பிரேதசம், மகாராஷ்டிரா, தமிழகம் மற்றும் மத்திய பிரேதசம் ஆகிய மாநிலங்களில், நிலக்கடலை அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.இந்தியாவிலிருந்து, மலேசியா, ஜப்பான், இந்தோனேஷியா, சீனா, கொரியா,

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்றவற்றை உள்ளடக்கிய தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் அதிகமான அளவில், நிலக்கடலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிலையில், இந்திய நிலக்கடலையில், "அப்லடாக்சின்' என்ற வேதிப் பொருள், நிர்ணயிக்கப்பட்டதை விட, அதிக அளவில் இருப்பதாக கூறி, மேற்கண்ட நாடுகள், இந்திய நிலக்கடலை இறக்குமதியை குறைத்து வருகின்றன.நிலக்கடலையில்,"அப்லடாக்சின்' என்ற வேதிப் பொருளின் அளவு குறித்து, அபாய உணவு பொருள் தடுப்பு ஆய்வகத்தின் (அசார்டு) சான்றிதழ் பெற வேண்டியது அவசியமாகியுள்ளது.

இந்த சான்றிதழ் பெறுவதற்கான, அனைத்து பணிகளையும், "அபெடா' அமைப்பு மேற் கொண்டு வருகிறது.இதையடுத்து, உள்நாட்டில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரிய ஏற்றுமதி நிறுவனங்களின் விவரங்களை, "அபெடா' கேட்டுள்ளது.

**சான்றிதழ்:**இந்நிறுவனங்கள்,"அசார்டு' சான்றிதழ் பெறும் பணிகள், வரும் ஜூன் 13ம் தேதிக்குள் நிறைவடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பிறகு, இந்த சான்றிதழுடன் ஏற்றுமதி செய்யப்படும் எண்ணெய் வித்துக்களை வெளிநாடுகள், தடையின்றி இறக்குமதி செய்து கொள்ளும் சூழல் உருவாகும்.

அதே சமயம், நச்சுக் கலப்பற்ற நிலக்கடலை சாகுபடி குறித்து, விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மத்திய வேளாண் அமைச்சகம் மேற் கொள்ள உள்ளது.இதனால், நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப் படுகிறது.

### புண்ணாக்கு ஏற்றுமதி40 சதவீதம் வளர்ச்சி



கோல்கட்டா:சென்ற ஜனவரி மாதத்தில், நாட்டின், புண்ணாக்கு ஏற்றுமதி, 7.68 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, இது, கடந்த ஆண்டின், இதே மாதத்தில், மேற்கொள்ளப் பட்ட

ஏற்றுமதியை (5.50 லட்சம் டன்) விட, 40 சதவீதம் அதிகமாகும் என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.இதில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 28.07 சதவீதம் உயர்ந்து, 4.84 லட்சம் டன்னிலிருந்து, 6.20 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான, பத்து மாத காலத்தில், புண்ணாக்கு ஏற்றுமதி, 36.78 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின், இதே காலத்தில், 44.85 லட்சம் டன்னாக அதிகரித்து காணப்பட்டது.

இதில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 17.72 சதவீதம் சரிவடைந்து, 30.82 லட்சம் டன்னிலிருந்து, 25.36 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.கணக்கீட்டு காலத்தில், தென் கொரியாவிற்கான சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 6.09 லட்சம் டன்னிலிருந்து, 7.65 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

வியட்நாமிற்கான ஏற்றுமதி, 7.86 லட்சம் டன்னிலிருந்து, 5.38 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.

ஜப்பானிற்கான ஏற்றுமதி, 4.63 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்


07.02.2013 A.M

## இணையதளம் மூலம் மஞ்சள் ஏலம் 10ம் தேதி துவக்கம்



ஈரோடு: மஞ்சளை கொள்முதல் செய்து தரம் பிரித்து இணையதளம் மூலம் 'இ-ஏலம்' விடும் முறை ஈரோட்டில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. உழவன் மஞ்சள் விற்பனை மையம் என்ற பெயரில் புதிதாக மஞ்சள் விவசாயிகளை அங்கத்தினராக கொண்டு புதிய நிறுவனம் வரும் 10ம் தேதி முதல் துவங்கப்பட உள்ளது. இதுகுறித்து உழவன் மஞ்சள் விற்பனை மையத்தின் நிர்வாகிகள், ஈரோடு மாவட்ட அனைத்து வியாபாரிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் சிவநேசன் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது: மஞ்சளுக்கு போதிய விலை கிடைக்காமல் மஞ்சள் விவசாயிகள் தடுமாறுவதால் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் மஞ்சளை தரம் பிரித்து அவற்றிற்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில் இ&ஏலம் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இதன் மூலம் மஞ்சள் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்றனர்.

## பாசனத்திற்கு 1.5 டிஎம்சி திறப்பு மேட்டூர் நீர்மட்டம் 32 அடியாக குறைந்தது



மேட்டூர்: 2 நாட்களில் மேட்டூர் அணையில் இருந்து 1.5 டிஎம்சி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. மேட்டூர் அணையில் இந்த ஆண்டு குறைவாக தண்ணீர் இருந்ததால், குறுவை சாகுபடிக்கு நீர் திறக்கப்படவில்லை. சம்பா சாகுபடிக்கு மட்டும் செப்டம்பர் 17ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. நீர்வரத்து குறைந்த நிலையில், தொடர்ந்து அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. பாசனத்துக்கு நீர் திறப்பு முன்கூட்டியே நிறுத்தப்பட்டதால், டெல்டா மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் கருகி வருகின்றன. பயிர்களை காப்பாற்ற வேண்டி, உச்சநீதிமன்றம் மேட்டூர் அணையில் இருந்து 2 டிஎம்சி நீரை திறந்துவிட தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. அதன்படி கடந்த 2 நாட்களாக வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் மளமளவென்று குறைந்து வருகிறது.நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 206 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 8956 கனஅடி வீதம் நீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 32.28 அடியாகவும், நீர் இருப்பு 8.46 டிஎம்சியாகவும் உள்ளது. இரண்டு நாட்களில் அணையின் நீர்மட்டம் 2.52 அடி வரை குறைந்துள்ளது. உச்சநீதிமன்ற உத்தரவுக்கு பின்னர் நேற்று காலை வரை அணையில் இருந்து ஒன்றரை டிஎம்சி வரை நீர் திறந்து விடப்பட்டுள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உணவு பாதுகாப்பு, தர நிர்ணய சட்டம் லைசன்ஸ் பெற காலக்கெடு நீட்டிப்பு



சென்னை : உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தின் கீழ் பதிவு மற்றும் லைசன்ஸ் பெறுவதற்கான காலக்கெடு ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் அமல்படுத்தப்படும் என்றும், உணவு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களை பதிவு செய்து கொள்வதோடு லைசன்ஸ் பெற வேண்டும். அவ்வாறு பதிவு செய்து லைசன்ஸ் பெறாமல் தொழில் செய்தால் ரூ. ஒரு லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை அபராதமோ அல்லது 3 மாதம் முதல் ஆயுள் வரை சிறையோ விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த சட்டத்துக்கு தமிழகத்தில் தொடர்ந்து எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனாலும் சில வணிகர்கள் தங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர். 540 உணவு பாதுகாப்பு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டு சில உணவு விடுதிகளுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பதிவு மற்றும் லைசன்ஸ் பெறுவதற்கான காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இதையடுத்து லைசன்ஸ் பெறுவதற்கான காலக்கெடுவை 2014ம் பிப்ரவரி 4 வரை நீட்டித்து மத்திய அரசின் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மத்திய அரசின் இந்த அறிவிப்புக்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, தமிழ்நாடு தொழில் வர்த்தக கழகம் போன்ற அமைப்புகள் நன்றி தெரிவித்துள்ளன.

### சப்போட்டா விழா மகாராஷ்டிரா ஏற்பாடு



மும்பை : மாங்கனி திருவிழாவைப்போல், சப்போட்டா பழத்தை பிரபலப்படுத்தும் விதத்தில், மகாராஷ்டிரா சுற்றுலா மேம்பாட்டு நிறுவனம், 2 நாள் சப்போட்டா விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளது. தானே மாவட்டத்தில் உள்ள தஹானு பகுதி சப்போட்டா விவசாயத்துக்கு பெயர் பெற்றது. இப்பகுதியில் 50 சதவீதம் அளவுக்கு பழங்கள்தான் பயிரிடப்படுகின்றன. சப்போட்டா மற்றும் விவசாய சுற்றுலா மேம்படுத்தும் வகையில், வரும் 9 மற்றும் 10ம் தேதிகளில் தஹானுவில் சப்போட்டா விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### விவசாயிகள் மேம்பாட்டு பயிற்சி

சிவகாசி, : தமிழநாடு நீர்வள, நிலவள மேம்பாட்டு திட்டத்தில் வல்லம்பட்டி உபவடி நிலப்பகுதி விவசாயிகளுக்கு மாற்று மேலாண்மை மேம்பாட்டு குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. வெம்பக்கோட்டை வேளாண்மை உதவ இயக்குனர் வனஜா முன்னிலை வகித்தார். சென்னை திறன் வளர்ப்பு மேலாண்மை பயிற்சி மைய பயிற்றுனர்கள் நடராஜன், சுதர்சன் ஆகியோர் நீரின் முக்கியத்துவம் குறித்து பயற்சி அளித்தனர். இதில் வல்லம்பட்டி, குகன்பாறை, கோட்டைபட்டி பகுதிகளை சேர்ந்த 50க்கும் மேறபட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

பயற்சிக்கான ஏற்பாடுகளை வெம்பக்கோட்டை வேளாண்மை அலுவலர் ராமசாமி, துணை வேளாண்மை அலுவலர் குருபாண்டியன், உதவி வேளாணமை அலுவலர்கள் கனகா, செந்தில்குமார், சுந்தர்ராஜ ஆகியோர் செய்திருந்தனர்.

## கடலை சாகுபடிக்கு மானியத்தில் ஜிப்சம்

திண்டுக்கல், : கடலை விவசாயிகளுக்கு 50சதவீத மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்பட உள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் கடலை சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 160 கிலோ வீதம் ஜிப்சம் வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஜிப்சம் தேவைப்படும் விவசாயிகள் தங்களது நிலத்தின் கணினி பட்டா, விண்ணப்பம், போட்டோவுடன் வேளாண் உதவி அலுவலர்களை அணுகி பதிவு செய்து கொள்ள வேண்டும். முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கடலையில் விளைச்சலை அதிகப்படுத்த அடி உரமாகவும், களையெடுக்கும் முன் மேலுரமாகவும் இட்டு மண்ணிடுவதால் கடலை காய்பிடிப்பு அதிகரிப்பதோடு பருப்பு, எடை முழுமையாகி, எண்ணெயும் அதிகரிக்கும்.

உர விலை அதிகமாகி வரும் வேளையில் கால்சியம் (சுண்ணாம்பு சத்து), சல்பர் (கந்தகம்) எல்லா நிலத்திற்கும், பயிருக்கும் அவசியம் என்பதால் வேளாண்மை துறை மூலம் 50சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று வத்தலக்குண்டு வேளாண் உதவி இயக்குநர் கோபால்ராஜ் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் வறட்சியால் வரலாறு காணாத அளவில் அரிசி வகைகள் விலை ஒரே வாரத்தில் கிலோவுக்கு ரூ.4 உயர்வு

சென்னை,

தமிழகத்தில் வறட்சியால் வரலாறு காணாத அளவில் அரிசி வகைகள் விலை ஒரே வாரத்தில் கிலோவுக்கு ரூ.4 உயர்ந்துள்ளது. பிரியாணி அரிசி விலையும் கிலோ ரூ.90 ஆக அதிகரித்துள்ளது.

### பருவ மழை பொய்த்தது

தமிழகத்தில் டெல்டா மாவட்டங்கள் உள்பட பரவலாகவே நெல் சாகுபடி செய்வது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழையும், தென்மேற்கு பருவமழையும் எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை.குறிப்பாக, டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினத்தில் ஆண்தோறும் குருவை, சம்பா, தாளடி என முப்போகம் நெல் விளைந்து வந்தது. ஆனால், இந்த ஆண்டு காவிரி தண்ணீர் கிடைக்காததால், ஒருபோகம் கூட முழுமையாக விளையவில்லை.

### நெல் வரத்து குறைந்தது

தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் போதிய மழையில்லாததால் இதே நிலைதான். இதனால், தமிழகத்தில் இந்த ஆண்டு நெல் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. ஆந்திரா, கர்நாடகம் போன்ற அண்டை மாநிலங்களில் ஓரளவு நெல் விளைச்சல் இருந்தாலும், தமிழகத்தின் நெல் தேவையை கருத்தில் கொண்டு, அங்குள்ள வியாபாரிகள் கூடுதல் விலை சொல்கிறார்கள். இதனால், தமிழக வியாபாரிகள் குறைந்த அளவே நெல் கொள்முதல் செய்கிறார்கள்.தமிழகத்திற்கு ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து தினமும் 200 லாரிகளில் நெல் வரத்து இருக்கும். ஆனால், விலை உயர்வால் தற்போது தினமும் 10 லாரிகளில் மட்டுமே நெல்வரத்து உள்ளது.

## வரலாறு காணாத உயர்வு

அண்டை மாநிலங்களில் நெல் விலை உயர்ந்துள்ளதால், தமிழகத்தில் அரிசி விலை வரலாறு காணாத அளவில் உயர்ந்து வருகிறது. கடந்த வாரம் ஒரு கிலோ ரூபாளி பொன்னி ரூ.28–க்கு விற்பனையானது, தற்போது ரூ.32 ஆக உயர்ந்துள்ளது. இதேபோல், அதிசய பொன்னி ரூ.30–ல் இருந்து ரூ.34 ஆகவும், பாபட்லா பொன்னி (புதியது) ரூ.32–ல் இருந்து ரூ.36 ஆகவும், பாபட்லா பொன்னி (பழையது) ரூ.34–ல் இருந்து ரூ.38 ஆகவும் விலை அதிகரித்துள்ளது.இதேபோல், இட்லி அரிசி ஒரு கிலோ ரூ.32–ல் இருந்து ரூ.36 ஆகவும், வெள்ளை பொன்னி அரிசி ரூ.44–ல் இருந்து ரூ.50 ஆகவும், பொன்னி பச்சரிசி (புதியது) ரூ.38–ல் இருந்து ரூ.42 ஆகவும், பொன்னி பச்சரிசி (பழையது) ரூ.40–ல் இருந்து ரூ.50 ஆகவும் விலை கூடியுள்ளது.

## அரவை மில்கள் மூடல்

பிரியாணி தயாரிக்க பயன்படுத்தப்படும் பாசுமதி அரிசி முதல் ரகம் ரூ.85–ல் இருந்து 90 ஆகவும், 2–வது ரகம் ரூ.65–ல் இருந்து ரூ.70 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. இதேபோல், 25 கிலோ எடை கொண்ட மூட்டை அரிசிகள் ரூ.50 முதல் ரூ.100 வரை விலை உயர்ந்துள்ளது.தமிழகத்தில் சுமார் 4500 அரவை மில்கள் உள்ளன. நெல் உற்பத்தி சரிவால், மாவட்டந்தோறும் உள்ள அரவை மில்களுக்கு நெல் வரத்து குறைந்துள்ளது. பல அரவை மில்கள் மூடிக்கிடக்கின்றன. ஒருசில அரவை மில்களில் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அவித்து உலர்த்தி அரிசியாக்கப்படுகின்றன. இதனால், பல அரவை மில் தொழிலாளிகள் வேலை இழந்துள்ளனர்.

## அரசு நடவடிக்கை எடுக்குமா?

எனவே, தமிழ்நாட்டில் அரிசி விலை உயர்வை கட்டுப்படுத்த, மேற்கு வங்காளம், பீகார், ஒடிசா, மராட்டியம், உத்திரபிரதேசம் போன்ற நெல் விளைச்சல் அதிகம் உள்ள மாநிலங்களில் இருந்து தமிழக அரசே நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று வியாபாரிகள் கருத்து தெரிவித்தனர். அப்போதுதான், அரிசி விலையும் கட்டுக்குள் வரும் என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

## அம்பையில் திருந்திய நெல் சாகுபடி திடலில் கலெக்டர் சமயமூர்த்தி ஆய்வு

அம்பை,

திருந்திய நெல் சாகுபடி திடலை நேரில் பார்வையிட்டு மாவட்ட கலெக்டர் சி.சமயமூர்த்தி ஆய்வு செய்தார்.

கலெக்டர் ஆய்வு

அம்பை பகுதியில் பல்வேறு வயல்களில் திருந்திய நெல் சாகுபடி முறையில், நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு இருக்கிறது. அந்த பகுதியில் திருந்திய நெல் சாகுபடி திடலை மாவட்ட கலெக்டர் சி.சமயமூர்த்தி நேரில் ஆய்வு செய்தார். அவருடன் வேளாண்துறை அதிகாரிகளும் வந்து இருந்தனர்.

பாமாயில் தயாரிப்புக்கான எண்ணெய் பனை திடல், நெல் ஆராய்ச்சி திடல், விதை சுத்தி நிலையம் ஆகியவற்றையும் கலெக்டர் ஆய்வு செய்தார். பின்னர் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். வேளாண்மை துறைக்கான மானியங்கள் சரிவர கிடைக்கிறதா? என்றும், விவசாயத்தை மேம்படுத்தும் வழிகள் குறித்த கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

விவசாயிக்கு ரொக்கப்பரிசு

அம்பை கோவில்குளம் பகுதியில் உள்ள வயல்களுக்கு சென்றும் ஆய்வு செய்தார். திருந்திய நெல் சாகுபடியில் சிறந்த விவசாயியாக தேர்வு செய்யப்பட்ட அயன்சிங்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இந்திராகாந்தி என்ற விவசாயிக்கு ரூ.10 ஆயிரம் ரொக்கப்பரிசுக்கான காசோலையை கலெக்டர் சி.சமயமூர்த்தி வழங்கி பாராட்டினார்.

கலெக்டரிடம் குடிநீர் பிரச்சினையை தீர்க்க வலியுறுத்தி கிராம மக்கள் மனுக்கள் கொடுத்தனர்.

ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குனர் சவுந்தரராஜன், தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜன் ரவிச்சந்திரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியன், அம்பை வேளாண் உதவி இயக்குனர் சுந்தரம், சேரன்மாதேவி உதவி இயக்குனர் சத்யஜோஸ், தோட்டகலை துணை இயக்குனர் பாண்டியன், அட்மா சங்க தலைவர் சங்கரன் மற்றும் வேளாண் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.24 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்

பெருந்துறை,

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.24 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் விடப்பட்டது.

கொப்பரை தேங்காய்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடைபெற்றது. மொத்தம் 1,116 மூட்டைகளில் 55 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டு இருந்தன.

இதில் முதல்தரம் கிலோ 44 ரூபாய் 50 காசு முதல் 46 ரூபாய் 5 காசு வரை ஏலம் போனது. இரண்டாம் தரம் கொப்பரை தேங்காய் 28 ரூபாய் 90 காசு முதல் 44 ரூபாய் 25 காசு வரை ஏலம்விடப்பட்டது.

ரூ.24 லட்சத்துக்கு ஏலம்

நேற்று நடந்த ஏலத்தில் கொப்பரை தேங்காய் மொத்தம் ரூ.24 லட்சத்துக்கு ஏலம் போனது.

கடந்தவாரத்தைவிட இந்த வாரம் நடந்த ஏலத்தில் கிலோவுக்கு 2 ரூபாய் விலை குறைந்தது.

இந்த விலை குறைவுக்கு காரணம் தேங்காய் எண்ணை விலை வீழ்ச்சியே என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தாராபுரத்தில் கரும்பு, தென்னையை காப்பாற்ற தினமும் 6 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் குறைதீர்ப்பு கூட்டத்தில் வலியுறுத்தல்

தாராபுரம்,

தாராபுரம் பகுதியில் தென்னை, கரும்பு பயிர்களை காப்பாற்ற தினமும் 6 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்று மின்வாரிய குறைதீர்ப்பு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

குறைதீர்ப்பு கூட்டம்

மின்நுகர்வோர் மற்றும் விவசாயிகளுக்கான குறைதீர்ப்பு கூட்டம் தாராபுரம் மின்வாரிய அலுவலகத் தில் நேற்று நடைபெற்றது. உடுமலை மின்பகிர்மான வட்ட தலைமை பொறியாளர் மனோகரன் தலை மை தாங்கினார். கூட்டத்தில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை முன் வைத்தனர். அதன் விவரம் வருமாறு:

குண்டடம் முத்தண்ணம்பட்டு விவசாயி ராமசாமி: குண்டடம் பகுதியில் உள்ள மின்கம்பிகள் மிகவும் பழமையானதாக இருப்பதால் மின்சாரம் தொடர்ச்சியாக வருவது இல்லை. காற்று

வேகமாக வீசினால் மின்கம்பி அறுந்து உயிர்சேதம் ஏற்படும் அபாயம் உள்ளதை மின் கம்பிகளை மாற்ற வேண்டும்.

<u>மும்முனை மின்சாரம்</u>

தாராபுரம் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் சின்னச்சாமி என்ற பழனிசாமி: அலங்கியம், மணக்கடவு பகுதிகளில் ஒருநாள் விட்டு ஒரு நாள் பகலில் 3 மணிநேரமும், இரவு 1 நேரமும் மும்முனை மின்சாரம் வருகிறது. அப்போது அனைத்து மின்மோட்டார்களையும் இயக்குவதால் பெரும்பாலான மோட்டார்கள் இயங்குவது இல்லை. எனவே கூடுதல் டிரான்ஸ்பார்மர் அமைத்து தினமும் 6 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். அப்போது தான் கரும்பு, தென்னை மரங்களை காப்பாற்ற முடியும்.

தலைமை பொறியாளர் மனோகரன்: முடிந்த அளவு மும்முனை மின்சாரம் வழங்கி வருகிறோம். மணக்கடவு, அலங்கியம் பகுதிகளில் உள்ள டிரான்பார்மர்களில் கூடுதல் இணைப்பு கொடுக்க வழி இல்லை. டிரான்ஸ்பார்மர்கள் மற்றும் மின் கம்பங்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை. எனவே தற்போது உள்ள டிரான்ஸ்பார்மரில் இருந்து மாற்று ஏற்பாடு செய்கிறோம்.

<u>குடிநீர் பிரச்சினை</u>

மணக்கடவில் எஸ்.எஸ். 8 டிரான்ஸ்பார்மரில் உள்ள சில விவசாய மின் இணைப்புகளை துண்டித்து, எஸ்.எஸ்.9 டிரான்ஸ்பார்மரில் இணைத்து தற்காலிக தீர்வு காணப்படும். தினசரி 6 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும். குண்டடம் பகுதியில் பழுதான மின்கம்பிகளை கண்டறிந்து படிப்படியாக மாற்றி வருகிறோம் என்றார்.

வடுகபாளையம் பட்டக்காரர் பாலசுப்பிரமணியம்: சங்கரண்டாம்பாளையம் ஊராட்சி வடுகபாளை யத்தில் குடிநீர் பிரச்சினை உள்ளது. அதை தீர்க்க ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் அமைத்து நீரை எடுக்க இதுவரை மின்சார வாரியம் மின் இணைப்பு வழங்க வில்லை. பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு மின்இணைப்பு வழங்க வேண்டும்.

<u>மாற்று ஏற்பாடு</u>

மின்வாரிய அதிகாரி மனோகரன்: குடிநீர் இணைப்புக்கு முன் உரிமை கொடுக்கப்படும். தற்போது அங்குள்ள டிரான்பார்மரில் குறைந்த மின் அழுத்தம் இருந்து வருகிறது. எனவே விரைவில் மாற்று ஏற்பாடு செய்து மின் இணைப்பு வழங்கப்படும் என்றார். இதில் உதவி செயற்பொறியாளர் நடராஜன், மற்றும் விவசாயிகள் தேர்ப்பட்டி நாட்டுத்துரை, திரு மலைசாமி, சிவசாமி, பழனிசாமி,

ராமசாமி, பண்ணையார் பழனிசாமி, செல்வன், வேலுசாமி, காளி முத்து உள்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால்களில் உயிர் தண்ணீர் திறப்பு

முத்தூர்,

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால்களில் உயிர் தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

பவானிசாகர் அணை

ஈரோடு, திருப்பூர் மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ள பவானிசாகர் அணையின் மொத்த கொள்ளளவு 120 அடி. இதில் 105 அடி வரை தண்ணீரை தேக்கி வைக்க முடியும். மீதி உள்ள 15 அடி சேறும் சகதியுமான பகுதியாகும். இந்த அணைக்கு நீலகிரி மாவட்ட வனப்பகுதிகளில் அதிக அளவு மழை பெய்யும் போது நீர் வரத்து அதிகரிக்கும்.

இந்த அணையில் இருந்து ஆண்டு தோறும் ஈரோடு மாவட்ட காலிங்கராயன் பாசன பகுதிகள், ஈரோடு, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கீழ்பவானி பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் வறட்சியால் அணையின் நீர் மட்டம் கணிசமாக குறைந்தது. இதனால் கடந்த ஆண்டு நஞ்சை சம்பா நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட வில்லை.

தண்ணீர் திறப்பு

அதன்பிறகு திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சியை சமாளிப்பதற்கும், குடிநீர் தேவைக்கும் 2 முறை குறைந்த நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. தற்போது அணையின் நீர் மட்டம் 42 அடியாக இருந்து வருகிறது. எனவே திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் கீழ்பவானி பாசன பகுதிகளில் வறட்சியின் காரணமாக கரும்பு, மஞ்சள், வாழை, எண்ணெய்வித்து பயிர்கள் காய்ந்து கருக தொடங்கியது, இதனால் கீழ்பவானி வாய்க்கால்களில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று கீழ்பவானி பாசன விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

அதை ஏற்று எல்.பி.பி. வாய்க்கால்களில் 10 நாட்கள் உயிர் தண்ணீர் திறந்து விட அரசு உத்தர விட்டது. அதன்படி பொதுப்பணித்துறை அதிகாரிகள் மூலம் நேற்று காலை 9 மணிக்கு

அணையில் இருந்து சென்னசமுத்திரம் வாய்க்கால்களில் ஒற்றைப்படை மதகுகளுக்கும் எல்.பி.பி வாய்க்கால்களில் இரட்டை படை மதகுகளுக்கும் சிறப்பு நனைப்பாக விநாடிக்கு 500 கன அடி உயிர் தண்ணீர் திறந்து விட்டனர். மாலை 6 மணிக்கு 1000 கன அடியாக உயர்த்தி தண்ணீர் திறந்து விட்டப்பட்டது.

திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் வறட்சியால் காயும் பயிர்களை காப்பாற்றவும், குடிநீர் ஆதாரத்திற்காகவும் கீழ்பவானி வாய்க்கால்களில் தண்ணீர் திறந்துவிடப்பட்டு உள்ளதால் கீழ்பவானி பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## இந்த நிதி ஆண்டில் பிற நாடுகளின் போட்டியால் அரிசி ஏற்றுமதி 25% குறையும்

புதுடெல்லி,

வியட்நாம், மியான்மர், பாகிஸ்தான் ஆகிய அண்டை நாடுகளின் போட்டியால், இந்த நிதி ஆண்டில் (2012–13) அரிசி ஏற்றுமதி 25 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச அளவில், அரிசி உற்பத்தியில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் இருந்து வருகின்றன. சென்ற நிதி ஆண்டில் பாசுமதி உள்ளிட்ட அரிசி ஏற்றுமதி வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்து இருந்தது. இதனையடுத்து அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தில் இருந்து வந்த தாய்லாந்து இரண்டாவது இடத்திற்கு சென்றது.

ஆசிய நாடுகளில், கடந்த 2009–ஆம் ஆண்டில் அரிசி விலை கடுமையாக உயர்ந்ததையடுத்து பாதுகாப்பு நடவடிக்கையாக மத்திய அரசு அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்தது. எனினும் அதற்கு பிறகு தொடர்ந்து அரிசி உற்பத்தி அதிகரித்து வந்ததால், இந்திய உணவு கழகத்தின் சேமிப்பு கிடங்குகளில் கொள்ளளவை விஞ்சும் வகையில் கையிருப்பு உயர்ந்து வருகிறது.

தேவைக்கும் அதிகமாக கையிருப்பு உயர்ந்து வரும் நிலையில், பல மாநிலங்களில் திறந்தவெளிகளில் தார்ப்பாய்களால் மூடி அரிசியை பாதுகாக்க வேண்டிய நிலை உருவானது.

இதனால், 2011–ஆம் ஆண்டில் மத்திய அரசு அரிசி ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்தது. இந்த நிலையிலும், தானிய கிடங்குகளில் இன்னும் நிரம்பி வழிகின்றன. ஜனவரி 1 நிலவரப்படி, அரசு சேமிப்பு கிடங்குகளில் கையிருப்பு இருக்க வேண்டிய அரிசி 1.18 கோடி டன்னாகும். ஆனால் இதைக் காட்டிலும் ஏறக்குறைய மூன்று மடங்கு அதிகமாக 3.22 கோடி டன் அரிசி கையிருப்பு உள்ளது.